# சகல வெறிகளுக்கும் எதிரான யுத்தம்





**பாமரன்**
*(பாமரனின் பக்கத்தில்)*

ஆரம்பத்தில் மைக்கேல் ஜாக்சனைப் பிடிக்காது எனக்கு. 'என்னைய்யா மனுசன் ஜன்னி வந்த மாதிரி கையையும் காலையும் ஆட்டுகிறான்? இதெல்லாம் ஒரு டான்சா?' என எரிச்சல் எரிச்சலாக வரும். போதாக்குறைக்கு நம்மூர் பிரபுதேவா வேறு.

ஆனால் நண்பன் வெங்கட்டுக்கோ இதெல்லாம் அத்துப்படி. அவன் வாயைத் திறந்தாலேயே மைக்கேல் ஜேக்சன், பிரின்ஸ், பிங்க் பிளாய்ட் என்றுதான் வரும்.

நண்பன் ஆள் பேரைச் சொல்கிறானா? அல்லது ஊர் பேரைச் சொல்கிறானா என முடிவு செய்வதற்குள் அவன் அடுத்த ஆளுக்குத் தாவியிருப்பான். 'நண்பா உனக்கு நம்மூர் ஆட்களையே பிடிக்காதா? அல்லது தெரியாதா?' என்பேன் கோபத்தை அடக்கிக் கொண்டு.

'எனக்கு நம்மூர் இசையையும் பிடிக்கும். அதைப் போலவே இசையின் ஒலி உலகின் எந்த மூலையில் இருந்து ஒலித்தாலும் அதை ரசிக்கவும் தெரியும்' என்பான்..

நல்லவேளையாக நான் நம்ம வடிவேல் பாணியில் இசைன்னா மியூசிக், மியூசிக்ன்னா இசை... என்று சொன்னதில்லை.

ஆனால் பொறுமையாக வெங்கட்தான் சொன்னான். 'நமக்கு நமது பாரம்பரியமான நடனங்களும், இசைக் கருவிகளும் இருப்பதைப் போல ஒவ்வொரு மண்ணுக்கும் அவரவர்களுக்குரிய இசையும், கலைகளும் இருக்கத்தான் செய்யும். நாம் அவர்களது நடனங்களைக் கேலி செய்வதோ அல்லது அவர்கள் நமது கலைகளை ஏளனம் செய்வதோ யாருக்குமே பயனளிக்காது. இப்படிப் புறம் தள்ளுவதால் கலைக்கு ஒன்றும் நஷ்டமில்லை. அனைத்து இழப்பும் நமக்குத்தான்.' என விரிவாகச் சொல்லுவான்.

அதன் பிறகுதான் நானும் கொஞ்சம் உலகத்தை உற்றுப்பார்க்க ஆரம்பித்தேன். அப்போதுதான் மைக்கேல் ஜாகசன் என்னும் கலைஞன் வெறும் அங்க அசைவுகளுக்கு மட்டும் சொந்தக்காரனில்லை இந்த உலகத்தையும் அதன் மேம்பாட்டையும் நேசித்த சக மனிதன் என்பது ஓரளவுக்குப் புரிந்தது.

1958 இல் சிகாகோவில் பிறந்து 51 ஆவது வயதில் தனது ஓயாத நடனத்தை நிறுத்திக் கொண்ட மைக்கேல் ஜாக்சனது குழந்தைப் பருவம் கொடூரமானது. ஐந்து வயதிலேயே ஆடத் துவங்கினான் என்பது அப்பட்டமான பொய். ஆட வைக்கப்பட்டான் என்பதுதான் மெய். காரணம் மைக்கேல் ஜாக்சனது குடும்பமே நடனத்திலும் இசையிலும் தம்மைப் பிணைத்துக் கொண்ட குடும்பம்.

அவனது அப்பா ஜாக்சன் 5 (JACKSON 5) என்கிற குழுவை நடத்தி வந்தார். நினைத்த பொழுதெல்லாம் சரியாக ஆடச் சொல்லி தலையைத் தலைகீழாக தொங்க விட்டு துவைத்து எடுப்பார் அப்பா.

அப்புறமென்ன தந்தை காட்டிய வழியில் தனயன் வேறு வழியின்றி தொடர தொலைந்து போயிற்று அவனது குழந்தைப் பருவம்.

இதனை பின்னர் ஒரு தொலைக்காட்சி நேர்காணலின் போது அவரே சொன்னபோது துக்கம் தாளாமல் தேம்பித் தேம்பி அழுதார் ஜாக்சன்.

மழலையில் துவங்கிய அவரது ஆடலும் பாடலும் மேற்கத்திய உலகையே புரட்டி எடுத்தது. அதன் பின்னர் உலக சாதனைக்காக கின்னஸ் புத்தகத்தில் பலமுறை இடம்பெற்றதோ, புகழ்மிக்க 'கிராமி' விருதுகளைப் பெற்றதோ அவரது இசை நிகழ்ச்சிகளை நடத்தி, இசைப் பேழைகளை உலகெங்கும் விநியோகித்து பலர் கோடிகளில் புரண்டதோ, அவர் 2700 ஏக்கரில் தனது வீட்டை நிர்மாணித்ததோ எல்லாம் ஏறக்குறைய அறிந்த தகவல்கள்தான்.

ஆனால் மைக்கேல் ஜாக்சனை தங்களது நடை, உடை, பாவனைகளில் பின்பற்றுபவர்கள் பலரும் அந்த மனிதனுக்குள் துளிர் விட்டிருந்த மனித நேயத்தை, சமூக அக்கறையை பின்பற்றினார்களா, என்பதுதான் கேள்வி.

மைக்கேல் ஜேக்சனைப் போல் பாடியவர்கள், மைக்கேல் ஜேக்சனைப் போல் ஆடியவர்கள், மைக்கேல் ஜேக்சனைப் போல் கொஞ்சமாவது இந்த உலகைக் குறித்து கவலைப்பட்டிருக்கிறார்களா?

அவர் கௌதமாலாவின் குழந்தைகள் நலனுக்காக கொடுத்தது பலகோடி.

கொசாவாவின் அகதிகளுக்காக செலவிட்டது பலகோடி.

நெல்சன் மாண்டேலா குழந்தைகள் நல நிதிக்காக அளித்தது பலகோடி.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்காக கொடுத்தது பலகோடி.

ஆனால் அவரை காப்பி அடித்த பலரும் மற்றவர்களுக்குக் காட்டியது தெருக்கோடியைத்தான்.

இவை போக ஏறக்குறைய 39 அறக் கட்டளைகளை ஏற்று நடத்தினார் மைக்கேல் ஜாக்சன்.

அவர் சமூக அக்கறை உள்ளவரா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவரே எழுதி இசையமைத்துப் பாடிய இந்த 'பூமி'யைப் (The Earth) பற்றிய பாடலையும் நிறவெறிக்கெதிராகப் பாடிய 'நீங்கள் கருப்பரா? வெள்ளையரா? (Black or White) பாடலையும் ஒரே ஒரு முறை கேட்டுப்பார்த்தால் புரியும்.

அவரைப் போல் இடுப்பசைவு வரவேண்டும் என்பதற்காக பிரயத்தனப்பட்டவர்கள் என்றேனும் தங்களது வருமானத்தின் சிறு பகுதியையாவது குழந்தைகள் நலனுக்காக செலவிட்டிருக்கிறார்களா? (தங்கள் குழந்தைகளின் நலனுக்காக அல்ல, உலகக் குழந்தைகளின் நலனுக்காக)

அவரைப் போல பாட வேண்டும் என்பதற்காக கடும் முயற்சிகளில் இறங்கியவர்கள்,அவரைப் போல நிறவேற்றுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறார்களா?

ஆனால் அவரிடமிருந்து பல பாடல்களை 'சுட்டவர்கள்' கூட அவர் சொன்ன அர்த்தத்தையே தலைகீழாக மாற்றி தமிழகத்துக்குத் தந்தார்கள். அந்தப் பெருமையில் 'இந்தியன்' ஷங்கருக்கு பெரும்பங்கு இருக்கிறது.

'நீங்கள் கருப்பரா வெள்ளையரா என்பது பொருட்டே அல்ல' (It Doesn't Matter if you are Black or white) என மைக்கேல் ஜாக்சன் நிறவெறிக்கெதிராய் நெத்தியடியாய் அடித்துச் சொன்னால்...

'நீங்கள் கருப்பரா வெள்ளையரா என்பதுதான் முக்கியமே' (Black or White its really matter) என 'சிவாஜி'யில் ஒரு கூடை சன் லைட்டை தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார் ஷங்கர்.

அந்த மேற்கத்தியக் கலைஞனுக்கு இருந்த நிறவெறி எதிர்ப்பில், சுற்றுச்சூழல் குறித்த அக்கறையில், குழந்தைகள் நலன் குறித்த கவலையில், காலே அரைக்கால்வாசி பங்காவது உள்ளவர்கள் மட்டுமே மைக்கேல் ஜாக்சன் பெயரை உச்சரிப்பதற்குக் கூட யோக்யதை உள்ளவர்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு சொல்லிக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

நீங்கள் மைக்கேல் ஜேக்சனைப் போல் நடக்கலாம், நீங்கள் மைக்கேல் ஜேக்சனைப் போல் இசைக்கலாம், ஆனால் நீங்கள் ஒரு போதும் மைக்கேல் ஜேக்சன் ஆகவே முடியாது என்பதுதான்.

ஆனால் இப்படி எல்லாத் திறன்கள் பெற்றிருந்தும் அந்தக் கலைஞன் மீடியாக்களால் பந்தாடப்பட்டான்... அவமானப்படுத்தப் பட்டான்... கூண்டிலேற்றப்பட்டான்...

காரணம்?

ஒரே காரணம், அவன் ஒரு ஆப்பிரிக்க அமெரிக்கன் என்பதுதான்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அன்று கொலை வழக்கில் கூண்டிலேற்றப்பட்டதற்குக் காரணம் சாதி வெறி.

கலைஞன் மைக்கேல் ஜேக்சன் நேற்று பாலியல் வழக்கில் கூண்டிலேற்றப்பட்டதற்குக் காரணம் நிற வெறி.

வெறிகளில் கிழக்காவது மேற்காவது?

சகல வெறிகளுக்கும் எதிரான யுத்தமே கலையையும் கலைஞர்களையும் விடுவிக்கும்.

**(அ)நாகரீகம்**

தாயின் மலத்தை அருவருத்து
முதியவர் இல்லத்தில் சேர்த்த – மகன்
நாயின் மலத்தை உறைகளிலே
நாள்தோறும் சேர்க்கின்றான் உறைகளிலே

– உமா மஹாலிங்கம்


## வரும் இதழிலிருந்து....

குடிவரவு விதிகளில் சிறப்பு அம்சங்கள் கொண்ட சட்டத்தரணிகள் அடங்கிய நிறுவனமொன்று அடுத்த வாரத்திலிருந்து தொடர் கட்டுரைகளை எமது இதழுக்கு தர உள்ளது.

இது தெடர்பாக மேலதிக விபரங்களை அறிய தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி

RATNA & CO